58

தெய்வமே துணை

பரத குல ஐக்கிய சங்கீத சபையார்

திவ்ய சந்தமரியதஸ்நேவிஸ் ஆண்டவளின்

திருவிழா ஞாபகார்த்தமாக

நடாத்திய கரூல் வைபவப் பிரசுரம்.

திவ்ய சந்தமரிய தஸ்நேவிஸ் ஆண்டவளின், பனிமயப் பக்திரஸக் கீர்த்தனை

இயற்றியவர்

எம். ஏ. பீரீஸ்.

பிரசுரித்தவர்கள்

...வசகாயப்பர்ணுந்து, சேசையாகூஞ்ஞு,

காரியதரிசிகள்.

...HE TUTICORIN PRINTING PRESS.

...ல 1922 அணா 2.

Q6:417
N22
188513

தெய்வமெதுணை

திருமந்திரநகரில்.

திருக்கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும்

திவ்ய சந்தமரிய தஸ்நேவிஸ் ஆண்டவளின்.

பனிமயப் பக்திரலக் கீர்த்தனை.

காப்பு

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

அண்டரொடு முனிவரும் அகில மெல்லாம்
அடிவணங்கத் தரும்வரத்தி அமல தாயே
தண்டரள மணியொதுங்கு மலைவாய் சூழ்ந்த
தனிமந்த்ர நகரினிய கோவி லாக
எண்டிசையும் புகழ்பரவ வெழுந்த தாயே
இறைபரத மக்களுக்கோர் மாதா வென்னத்
தொண்டளிக்கும் பனிமயமுன் இருதா ளின்றே
கொண்டாடித் துதிக்கவருள் தாரா யம்மா!

இராகம்-பைரவி] [தாளம்-ரூபகம்

"கழுகு மலைக்கிருந்த நேராய்" என்ற மெட்டு.

பல்லவி

கொண்டாடு வோமிந்த நாளே—திரு
நாளிது தாய்மரி
நாள் நல்ல நாளிது கொண்.

அநுபல்லவி

குலைந் திக ழுரும் யனி
மயம் புகழ் பதந் தனைக் கொண்.

குலவு ககன மிலகு பரிதி
யதனை யணியு மழகு வதனி கொண்.

குயிலிசை பெரிதல வதனினு மினிதருள்
குரலொடு தயைமழை பொழியெம தரசியைக் கொண்.

குனுங்கி னிழிதலை நசுங்க விழியது
பிதுங்க மிதியெம தணங்கு கழலிணை கொண்.

குடித்தழல் கதுவ அடுத்தெம துரிமை
பறித்திடு மறலி துரத்திடு கனியைக் கொண்.

கொடும்பழி யமரை வெலும்படி வலமை
தருந்தகு சகுண வரந்திகழ் மணியைக் கொண்.

குற்றத்தினி லுட்பட்டுழல்
வர்க்குத்துணை மிக்கத்தரு
பக்திப்பரி சுத்தக்கனி கொண்.

கொலைக்கு மிகவுறு பகைக்கு முளவெமை
யளிக்கு மதுரித மனத்தி னிறைவியைக் கொண்.

சோதி லாதவள நீதி வேரதுசு
போத வாரணிவி வேக பூரணியைக் கொண்.

குவளைப் பொருகட் கடைநட் புறுவர்க்
கிலைதூர்ப் பகையிப் புவனத் திவளைக் கொண்.

கொலையுங் களவும் பழியும் பலமுள்
தொலையும் படியின் கருளுங் கருணம் கொண்.

குமுதமலர் வாயின எமுதமொழி நாவின
னிவளை யனுகாதவர் எரிநரக மூழ்குவர் கொண்.

கொடைக்கரத் தினிய நிழற்படக் கொடிய
பவப்படர்ப் பரிதி பனிப்பொரத் தொலைகக் கொண்.

குண கர வசீ கரி
தயா பர மனோ கரி
வரோ தய சரோ ருகம் கொண்.

கொப்பிற் பழுத்தகனி ஒப்பப் புசித்தவினை
தப்பச் செழித்ததரு செப்பக் கிடைத்ததிரு கொண்.

குழந்தை மதிகொடு புரிந்த வினைபல
வகன்று கதிவழி தொடர்ந்து செலவருள் கொண்.

குளிர்நிலவு தோணு மழகுதிகழ் பாத
தெரிசனவி சேஷ மிலகுதிரு நாளைக் கொண்.

சரணம்

கோபம் பழி கொலை காமவிகாரங்
கூடு மலை விட் டருட்கரை யோரங்
கொண்டுடைமைச் சேர்ப்பது பேரு பகாரம்
இதுவே யடி யவர் சாதனை
மரியே பனி மயமே யருள் கொண்.

இராகம்-கமாஸ்] [தாளம்-ருபகம்

"சுஜன ஜீவனு" என்ற மெட்டு.

பல்லவி

தருண மீதம்மா—தாயே
கருணை கூரம்மா—தாயே

அநுபல்லவி

இரண ரூபியே—ஜீவா தரசொ ரூபியே—வரவா
பரம தேவ தேவ சுந்தர விரத சம்பன்ன—தாயே

சரணம்

வேத ஞான வித்யா கான மிக்க விற்பன்ன
ஜோதி மோன த்யான யோக தூய சத்குண
விமலி பூரணி—ஏழை விசனந் தீரினி—வேளை
விலகொ ணாத பாத பந்தனம் இல்க நெஞ்சமே—தாதா

இராகம்-செஞ்சுருட்டி] [தாளம்-ஆதி

லாவணி

1. அன்று வன மீதி லேவை இன்ற கனியால் விளைந்து
கொண்ட வினைதீர வந்த நாதன்—திரியுலக
மண்டல மாளுந் தனி ராஜன் [-யெனத்

தனை இப்புவிமீ தினி லற்புதமே யொரு பொற் புயர்சே
தந்த பனிமயமுன் தாளிணை தக்க துணையே-அடியவரைத்
தற்காத் தருள் வாயனையே

2. எந்தையர் எமது முன்னோர் சொந்தமா யமைத்த திரு
மந்திரத் தெழுந்த பரிமளமே—பரதகுல
மக்களவரி னடைக் கலமே

பத நீழ லிலே வளர் காவலிலே என தாவலிதே—யென
இந்நாள் வரை யபயம் தந்தா தரிக்க வில்லையா-புரிந்தபிழை
மன்னித் தளிக்க வில்லையா

3. கப்பலும் படகு தோணி தெப்பமு மணி யணியாய்
எப்பவு மிலங்குந் துறை முகமே—அதனருகில்
ஒப்பில்லாக் கோவி லகமே [யே—கொடு

உறை சுந்தரியே துணை யுண்டெனவே அரண் கொண்டனை
சர்ப்பந் தனை மிதித்த பொற்பாத சேவை புரிவார்—தயரகலத்
தப்பாது காவல் புரிவாய்

4. அப்புலி யொதுங்கு கழல் சம்பு மடியோர் மனது
வெப்பியே நலியவிடல் தகுமா—அருளிறைவி
யென்பதற் கிது பொருந்திடுமா
மட மாதருளே வர மேவியதோர் பரி பூரணியே—இனி
எம்பா லுனது கடைக் கண் பார்வை வேணுமே யம்மா—இலை
தம்ப மிங்குண்டோ சொல்லம்மா [யெனிலோர்

5. கடலிற் சுழியிற் கப்பற் படகிற் புயலிற் பட்டுக்
கலங்கும் பொழுது வருவாயே—அடியவரைக்
கை தூக்கியே கரை சேர்ப்பாயே [மைக்
கன மாமுகிலே யெழில் மாமயிலே யருட்பார்வையிலே—யெ
கனிவுடனே நடத்தக்கடனுனக்கில்லை யென்பாயோ-எனிலெமது
கருணைக் கடலுமாவாயோ

இராகம்-இந்துஸ்துதான் பியாக்) (தாளம் ஆதி

("மீனாட்சி ரமணா"—என்ற மெட்டு)

பல்லவி

கொண்டாடு மனமே
நன்றாகத் தினமே

அநுபல்லவி

1. கோகுல தேவி
குளிர் அருள் வாவி
கோத கன்றவ தீத சுந்தரி
பூதலந்தனை யே புரந்தவள் கொண்டாடு.

2. ஆரண வேலி
ஆநந்த சீலி
ஆதி மத்தியி லாத நித்தனை
மீதளித் தம கா வாத்தினள் கொண்டாடு.

3. கலைக்கொரு வாணி
கதிக்கொரு ஏணி

கற்பு மிக்கவ ளற்புதக் கனி
தொற் பழித்தலை சிக்க னைத்தவள் கொண்டாடு.

4. அம்புவிப் பாதம்
அரிய நற் போதம்
அந்தரம் புவி சந்ததந் துதி
தந்திடுந் தவ மிஞ்சு மஞ்சனி கொண்டாடு.

5. பரதவர் மாதா
பரிவு மிராதா
பரவு மந்திர புரி யமர்ந்திடு
மிறைவி யின்சுப தினமு மின்றென கொண்டாடு.

இராகம்-காப்பி) (தாளம்-ஆதி

"கபிலோ அரிஸ்மரண" என்ற மெட்டு

பல்லவி

மரியை குரு குல மர பெழு பர
தவர் தமக் கொரு மாதா—தஸ் நேவிஸ்

அநுபல்லவி

பசிவாக அடைக்கல மளித்தவள்
பரம் பரை நலம் பெறவே—தஸ் நேவிஸ்

சரணங்கள்

1. எரி நேர் முகம் மதியரும் வடுகரும்
இகலுறும் சமராடி—இடையிலது
புரிவார் பழி யவர்வலி யறவற இயற்றிய நலின் கோடி
சருவேசன் திருமறை விரிவுறத் தருந் துணை புரிந்தவளே
—தஸ் நேவிஸ்.

2. திரைசேர் சுடர்த் தரளமும் பவளமும்
திகழ் கன காசனத்தில்—அரசியென
உறைவாள் உரை யரிதெனும்படியருள் ஒழுகிய நெறி செலுத்தி
தரைமீதி லடிபரை யனுதினம் சலிப்பறப் புரப்பவளே
—தஸ் நேவிஸ்.

3\. ஒரு நாளொரு பொழுதவளடி மலர்
உறுபவர் எவரேனும்—வினையகலப் [னும்
பெறுவா ரென முதியவர் எழுதிய பெருமொழி நிறை தோ
நிருவாகி நிலமிசை யடியவர் நிரந்தர சுதந்தரமே —தஸ் நேவிஸ்

இராகம்-செஞ்சுருட்டி) (தாளம்-ரூபகம்

லாவணி

1\. கோடை யடிக்குதம்மா கொடிமர மாடுதம்மா
குமுறிக் குதித்து வருமா
அலைகடலிலே சுழிபுனலிலே—தோணி
கொண்டு செல்வோம் திடமாய்

2\. மரிய மாதாவே யென்று பிரியமுடனே விண்டு
மரக்கல மோட்ட நன்று
குறைவு வருமோ குறிதவறுமோ—மன
மகிழ்ச்சி யனுதின முண்டு

3\. பாரச் சரக்கெடுத்துப் பள்ளக் கடல் கிழித்துப்
படர் புயலை யெதிர்த்து
வலுத்த படகு செலுத்து மழகு—இனிதே
பனிமயத் தாயைத் துதித்து

4\. மப்பு மழை முழக்கம் வார் புயல் நீர்க் கலக்கம்
ஒப்பவருங் காலிரக்கம்
புரிகுவாயென அருள்குவாய் துணை—இதுவே
மதி குல மக்கள் வழக்கம்

5, கரையு மறைந்து குரு சடியு மறைந்து பெருங்
கடலி லிருந்த லமரு
பொழுததனிலே நொடியதனிலே—வந்து
கைதூக்கி யாளு முன்னருள்

6\. இரவில் திசைபிரிந்து இருங்கடலில் திரிந்து
இடர்ப் படும் வேலை நினைந்து

பனி மயமென்றே யழுவது கண்டே—அபயம்
இனி தருள்வாய் விரைந்து

7. திருமந்த்ர நகரிலே திங்களாவணி யிலே
தேதியோ ரைந்தினிலே
ஒரு குறையிலா மரி திருவிழா—பரதவர்
செல்வத் திரு நாளிதுவே

இராகம்-தேசிகபியாக்) கண்ணிகள் (தாளம்-சாப்பு

"பாலாபிஷேகம்" என்ற மெட்டு

1 தாய் தசுரேவிஸின் தண்டாமரைப் பதம்
தாச ரெமக்குத் தருமோர் தஞ்சம்
தாராரு சீராளர் ஈராறு பூபாலர்
தங்கள் மரபெழு திவ்ய அஞ்சம்

தொஹைரு

சாலி குணுளி நன்னூலிய தீத சத்ய மாமறை வேலியே
பாலி விவேக சம்பன்ன வநு கூலி சுகாநந்த மூலியே

முடுகு சந்தம்

தனிமுத லொருவனே யருளிய நெஞ்சம்
தனயரின் மிசைதர மொழியென வஞ்சம்

பல்லவி யெடுப்பு

தாரகை சூடிய தாய் மரியே யின்னம்
தாமதமேனருள் தாராய் கொஞ்சம் —தாய்

2 ஏவை பழி தரு காயுண வேமதி
எத்தி யுரைத்துக் கெடுத்த சர்ப்பம்
நச்சுச்சி ரத்தைப்ப தத்திற்சி தைத்திட்டு
ஏத மகற்று மினிய புட்பம்

தொஹைரு

[கரியே
எந்தாய் மரியே எமையா தரியே எழிலார் பரகதியருள் மனோ
உந்தாள் இணையே யலதொரு துணையே உலகெமக்கிலை கிருபா
கரியே

முடுகு சந்தம்

இனி யுனை விடு வது மிலை இது உண்மை
இடருறு எரிவினை கெடவருள் நன்மை

பல்லவி யெடுப்பு

எப்பொருள் நாதனைக் கைப்பெறு நாயகி
எப்பொழுதுந் துதி செப்புவமே —தாய்.

இராகம்-சுத்தப் பைரவி) (தாளம்-ஆதி

"ஸ்ரீ ரகு வர சுகுண" என்ற மெட்டு

பல்லவி

ஸ்ரீ மதுரித கிருபா கர வாரி
விதரண தேவி நீ வாராய் நேரில்

அநுபல்லவி

மாதா [illegible]ரீக மாதா புரூரவர்
மாதா திருமந்திர மாநக ராள் மாதா —ஸ்ரீ மது

சரணம்

பாவிகள் தம்பம் பனிமய பிம்பம்
பரவு வார் துன்பம் பறித் தெமக்கரு ளின்பம் -ஸ்ரீ மது

இராகம்-தேசிக தோடி) (தாளம்-ஆதி

"தாதரயாய் நவ்ரோஜி" என்ற மெட்டு

பல்லவி

மாதா வே தஸ் நேவிஸ்—மா

அநுபல்லவி

மந்திர மா நகர்
வந் தினிதே யமர்—மா

சரணம்

தாயே பனி மயமே சால மோ ஹாலயமே
சாரசர்க்கரை தேற லொத்துரை
யோடு மக்களை யா தரித்தருள் -மாதா.

தொகையறு

பொய் மறை கிடந்து மெய் வழி துறந்து
புனலுறும் துரும் பென மெலிந்தே
ஐயமுந் திகிலும் வெப்புறு பரதர்
அருண் மறைபுக நலன் புரிந்தே
மட்டிறந்த நன்மை செய்தாய்
துட்ட நஞ்சரவு கொய்தாய்
மாமணந் திக ழோர் பதம் பெறு
சீர் நலந் தர வே நினைந்தருள் —மாதாவே.

2 ஆகமத் துறை கடந்த அற்புதமே யகந்த
காலமுந் தயை நீ பொழிந் தமை
யாளவுந் தடை யே திகந்தனில் -மாதாவே.

தொகையறு

ஆழிவாய்ப் படுத்த சீத வெண்டாளத்
தணி பெறு மாணி முத்தே
ஆழிமீதி வர்ந்த ஜோதிநாயக னருள்
அற்புத வேத வித்தே
அண்டி வரு சேய ரெந்தம் அருங்கலி தீர் வுந்தம்
சீரரும் புக லேர் கரந் துயில்
தூய மைந்தனின் பாலிரந்தருள் மாதாவே.

3 தெய்வீக சம்பூரணம் வைதீக ஆபரணம்
சிற்ப நற் கலை யிற் சமர்த்தர
மைத்த கைத்திறன் மிக்க சித்திரம்

தொகையறு

திக்கற்ற ஏழையர் சித்தத்திலே கவலை
மிக்குற்ற லைபவர்க்கோர் துணையே
எக்குற்ற மேவினுங் கிட்டத் தகாவெனச்
சொற்றத் தகுமோ மரியன்னையே
தெவிட்டாத தீங்கரும்பே சிதையா மலரரும்பே
சிறகிழந் தயர் பறவை யென்றுளம்
நலிந்த மைந்தரை நினைந்து வந்தருள் -மாதாவே.

இராகம்-பரசு) (தாளம்-ஆதி

"கழுகுமா மலே முருகா" என்ற மெட்டு

பல்லவி

அடுக்குமோ பனி மயமே
அடியவ னெனே வெறுத்
தகன்றிடுவது முனக்——கடுக்குமோ.

அநுபல்லவி

அன்னே நீயே—இரு—கண்ணும் நீயே
அவனியி லுனேயன்றி ஆர் துணே யெனக்குண்டு-அடுக்.

சரணம்

அலகையை நம்பி அவனியில் வெம்பி
அலேபடு துரும்பி னழிவினே விரும்பி
ஆசை வலே வீழ்ந்து——கொடு——மோசமதி லாழ்ந்து
அவதி நானுறும்போது அறியா திருப்பதேது-அடுக்குமோ

இராகம்-தேசிக கமாஸ்] [தாளம்-ஆதி

"சுவாமி விவேகாநந்தா" என்ற மெட்டு

பல்லவி

தாயே தயை கூரம்மா
தனயர் முகம் பாரம்மா

அநுபல்லவி

சர்வ லோக இவறவ னுன
பரனே ஈன்ற பரம ஞான —தாயே

சரணங்கள்

வானாட்டு மஹா ராணி வற்றாத அருட் கேணி
திவ்ய வாணி
பானுடைத் திருமேனி பக்தி நல முயர் காணி
பரவு வார்க் கினிய பாணி பதி தர் ஆணி
பதும நேரு—மினிய தாளேத்
தொழுது பூண—அருளு மோன —தாயே.

2 பரிமள சுகந்த புட்பம் பசி வறுமை போக்கு மப்பம்
பரம தெப்பம்
பழி கொலை பாவ வெப்பம் படர்ந்து கன குழப்பம்
இழிவுறச் செய் விகற்பம் எவண்ச கிப்பம
பணியு மேழைப்—பரத சேயர்
பிணிகள் தீர—அருளின் நேரம் -தாயே.

இராகம்-இந்துஸ்தான் பியாக்) (தாளம்-ஆதி
"சடற் கரை யோரா" என்ற மெட்டு
பல்லவி
அடைக்கலம் நீயே
ஆனன் சேயே
அநுபல்லவி
1 இளம் பிறை மேவு
பதந் துதி சேவை
தாராய் தாராய் தாராய்-அடை.
2 ஆதவன் அணியே
அமரர்கள் பணியே
வாராய் வாராய் வாராய்-அடை.
3 அற்புத சீலி
அருண் மறை வேலி
வாராய் வாராய் வாராய்-அடை.
4 அணி மலர்ப் பாதம்
அது பிர சாதம்
தாராய் தாராய் தாராய்-அடை.
5 உனை யன்றி வேறு
துணை யெவர் கூறு
தாயே தாயே தாயே-அடை.
6 பரதவர் தாயே
பனிமயத் தாயே
வாராய் வாராய் வாராய்-அடை
சம்பூரணம்